விலைகுறையும். இந்த விற்பனை வரி தனியாகப் போடாத சில விடுதிகள் இருக்கின்றன. மொத்தமாக வரி கட்டுகிறவர்கள். அவர்கள் தான் இதிலே குறைப்பார்களா என்பதை அவர்களிடத்தில் பேசி மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டதையொட்டி உணவுத்துறையும் அவர்களிடத்தில் பேச இருக்கிறது. அவர்கள் 10,15 நாட்களுக்கு பிறகு, ஒரு மாதம் ஆனதற்கு பிறகு அதிலே என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டதற்குப் பிறகு தான், நாம் அதிலே ஈடுபட்டு எந்த விலைக்கு அவர்கள் விற்க முடியும், விற்றால் அவர்களுக்குச் சரியாக இருக்கும் என்பதை நிர்ணயிக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 244, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

244—

கிராமப்புற மருத்துவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்தல்

***26162—டாக்டர் வெ. சரோஜா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் ``Heart Attack'' கண்ட நோயாளிகளுக்கு அந்த இடத்திலேயே முதலுதவி செய்ய கிராமப்புற மருத்துவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கிராமப்புறங்களில் `Heart Attack'' கண்ட நோயாளிகளுக்கு, அந்தந்த பகுதிகளில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் தக்க சிகிச்சை அளிப்பார்கள். ஆகவே, இதற்காக சிறப்புப் பயிற்சி ஏதும் தேவையில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஹெல்த் பார் ஆல் பை 2000 ஏ.டி.' என்ற உயரிய நோக்கோடு செயல்பட்டு வரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி

1995 ஏப்ரல் 6]

அவர்களின் பொற்கால ஆட்சியில் 80,000 முதல் 1.20 இலட்சம் ஜனத்தொகை கொண்ட ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு சமுதாய சுகாதார நிலையம் அமைத்துள்ள இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில், ஒரு சிவில் சர்ஜன், சிவில் அசிஸ்டென்ட் சர்ஜன், ஒரு கைனகாலஜிஸ்ட், ஒரு பீடியாட்ரிஸ்ட் ஆகியவர்களை அமைத்து சிறப்பாக மருத்துவ உதவியும், பல்நோக்கு மருத்துவ சிகிச்சையும் அளித்து வருகிறது. அந்த மருத்துவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிப்பதன் மூலம் கிராமப்புற மக்களுக்கு 'ஹார்ட் அட்டாக்' பற்றிய விழிப்புணர்வும், அரசுக்கு அதிகமான நிதியொதுக்கீடு செலவு இல்லாமல் கிராமப்புற மக்கள் அனைத்து சிகிச்சையும் பெறுவதோடு, ஹார்ட் அட்டாக் நோயிலிருந்து இறப்பு விகிதத்தைக் குறைப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதால் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில் இந்த சிறப்புப் பயிற்சியை இந்த மருத்துவர்களுக்குக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹார்ட் அட்டாக் நோயாளிகள் வந்தவுடன் அவர்களுக்கு என்ன முதலுதவி அளிக்க வேண்டும் என்பதைப்பற்றி ஏற்கனவே இருக்கிற அந்த மருத்துவர்களுக்கு அடிப்படையாகத் தெரிந்திருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். ஒரு வேளை அதற்காக சிறப்புப் பயிற்சி தேவையென்று சொன்னால் படிப்படியாக அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

பிற்பகல் 10.25

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலையங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் போது Cardio-pulmonary resuscitation செய்யும் வண்ணம், அந்த நிலையங்களில் E.C.G. Monitor மற்றும் Defibrillator போன்ற சிறப்பு மருத்துவக் கருவிகளை அங்கே அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இ.சி.ஜி. மெஷின்னை அந்த இடத்திலே கொண்டு போய் வைப்பதன் மூலமாக, அவர்கள் நோயாளிகளைக் கண்டுபிடித்தாலும் கூட அதற்குப் பின்னாலே தொடர்ந்து அங்கே சிகிச்சை கொடுப்பதற்கான முழு வசதிகளையும் ஏற்படுத்துவது என்பது சாத்தியமாக இருக்காது. எனவே, அவர்கள் உடனடியாக அங்கே இருக்கிற ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ்பிட்டலுக்கோ அல்லது எங்கே அந்த வசதி இருக்கிறதோ, அந்த மருத்துவமனைக்கு உடனே அனுப்புவதுதான் பொருத்தமாக இருக்கும்

என்று நாங்கள் கருதுகிறோம். எனவே, இ.சி.ஜி. மெஷின் இல்லாமலே நோயாளிகள் சொல்கிற ஹிஸ்டிரியை வைத்துக் கொண்டு, அங்கே அந்த மருத்துவர்கள் அவர்களுக்கு முதல் உதவி வழங்க முடியும் என்று நான் கருதுகிறேன். எனவே, முதல் உதவியை வழங்கிவிட்டு, சந்தேகம் இருந்தால், உடனடியாக அவர்களை ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடலாம். ஒருவேளை இ.சி.ஜி. மெஷின் இருப்பதன் மூலமாக பயன் இருக்கும் என்று எக்ஸ்பர்ட்ஸ் கருதினால், அதற்கான நடவடிக்கையை ஆலோசித்து—நிதிநிலைமை போன்ற பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன—அதற்கு ஏற்ப நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றுதான் இதற்கு நிறைய விளக்கம் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

வினா எண்.245, டாக்டர் மு. காளிராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

245—

அறுவை சிகிச்சை நோயாளிகளுக்கு எய்ட்ஸ் நோய் பரிசோதனை

***36521**—டாக்டர் மு. காளிராஜன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறுவை சிகிச்சை செய்து கொள்கின்ற எல்லா நோயாளிகளுக்கும் கண்டிப்பாக எய்ட்ஸ் நோய் பரிசோதனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது நிலவிவரும் மத்திய அரசாங்கத்தின் தேசிய எய்ட்ஸ் நோய் கட்டுப்பாட்டு மையத்தின் கொள்கை வகைப்படி அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் எல்லா நோயாளிகளுக்கும் எய்ட்ஸ் நோய் பரிசோதனை செய்வதற்கான கொள்கை இல்லை.

டாக்டர் மு. காளிராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு அறுவைச் சிகிச்சை செய்து